# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.07.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 4148/F/2022**

திரு.சி.ஜெயக்கொடி, புகார்தாரர்
3/164, கிழக்கு வீதி,
கஸ்தூரிப்பட்டி,
வரதராஜபுரம் அஞ்சல்,
நாமக்கல்-637 013.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
சேந்தமங்கலம்-637 409,
நாமக்கல் மாவட்டம். --- பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 15.09.2022 தேதியிட்ட பொதுத் தகவல் அலவலர், வட்டாட்சியர் அலுவலகம், சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், வரதராஜபுரம் பஞ்சாயத்து, கஸ்தூரிப்பட்டி கிராம சர்க்கார் புறம்போக்கு சர்வே எண்.390/16 தனிநபர் ஆக்கிரமிப்பு மனு நாள் 15.06.2022 நடவடிக்கை எடுத்து வந்த நிலையில் W.P.No.5859/2021, 10.03.2021 தீர்ப்புக்கு தடை W.P.16264 தடை தற்போது நீக்கப்பட்டு தீர்ப்பும் கிடைக்க பெற்றது ஆதலால் மேற்கண் மனுவின் மீது

நடவடிக்கை தற்போதும் எடுக்காததற்கான விவரம் தரவும்" என்பன போன்ற தகவல்களை 11 இனங்களில் வழங்கக் கோரியுள்ளார்.

2. மனுதாரர் பொதுத் தகவல்அலுவலரிடமிருந்து தகவல்கள் பெறப்படாததால் மனுதாரர் 28.10.2022 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் பொது தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்கப்படவில்லை என பொது தகவல் அலுவலர் மீது பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கோரி 29.11.2022 தேதியிட்டு பிரிவு 18 (1)-ன் கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் CP 4148/F/2022 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன புகார் மனுவின் மீது காணொளி காட்சி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03.07.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளி காட்சி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோருக்கு ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய காணொளி காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ஏ.கோமதி, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய காணொளி காட்சி விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலரால் க.எண்.ப.மு.5709/2022/ஆ1, நாள் 12.10.2022 தேதியிட்ட கடிதத்திலும், மேல்முறையீட்டு அலுவலரால் கடித எண்.ப.மு.6812/2022/பி1, நாள் 28.11.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரரும் தனக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட 12.10.2022 தேதியிட்ட கடிதம் தனக்கு 02.12.2022 அன்று தான் கிடைக்கப்பெற்றதாகவும், அவ்வாறு பெறப்பட்ட தகவல்கள் தவறான தகவல்களாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரணை செய்கையில் 12.10.2022 தேதியிட்ட கடிதம் 30.11.2022 அன்று தான் Dispatch செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றின் நகலை ஆணையத்தின் பார்வைக்கு சமர்ப்பித்தார். மனுதாரர் புகார் மனு தாக்கல் செய்துள்ளதால் புதிய தகவல்கள் வழங்க உத்தரவிட இயலாது. இந்நிலையில், ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- **மனுதாரரின் 15.09.2022 தேதியிட்ட தகவல் கோரும் மனுவிற்கு க.எண்.ப.மு.5709/2022/ஆ1, நாள் 12.10.2022 தேதியிட்ட கடிதத்தை 30.11.2022 அன்று காலதாமதமாக DESPATCH செய்ததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திருமதி.க.கீதா, பொதுத் தகவல்**

**அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20 (2)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு மேற்சொன்ன அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மேற்சொன்ன பொதுத் தகவல் அலுவலரிடம் விளக்கத்தினை பெற்று 24.07.2025 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4148/F/2022</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்துத் துணைவட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
சேந்தமங்கலம்-637 409,
நாமக்கல் மாவட்டம்.

**(அப்போதைய) பொதுத் தகவல் அலுவலர்**
**திருமதி.க.கீதா,**
**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**சேந்தமங்கலம்,**
**நாமக்கல் மாவட்டம்**

**<u>மனுதாரர்:-</u>**

திரு.சி.ஜெயக்கொடி,
3/164, கிழக்கு வீதி,
கஸ்தூரிப்பட்டி,
வரதராஜபுரம் அஞ்சல்,
நாமக்கல்-637 013.

**<u>நகல்</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.

Copy to: File NS/PA-